# நாணயம் செய்திமடல்

## [ உள் சுற்றுக்கு மட்டும் ]

மலர் : 1 இதழ் : 2

அரசியல் மற்றும் சமயம் சாரா

கிராமிய வளர்ச்சிப்பணித் தகவல் மடல்

## [பெண் வன்முறைகளுக்கு எதிரான சிறப்பு மலர் ]

ஆசிரியர் : திருமிகு. பொற்கொடி,

ஆசிரியர் குழு உறுப்பினர்கள்: திருமிகு.எர்ஸ்கின், திருமிகு.சந்தனமாரி, திருமிகு.ராஜேஸ்வரி, திருமிகு. நிர்மல் ராஜா

அன்பான வாசகர்களே,

ஆசிரியர் குழுவின் சார்பாக வணக்கங்களும், வாழ்த்துக்களும் ! கடந்த இதழில் பெண்குழந்தைகள் பஞ்சாயத்து நிர்வாக அமைப்பு, தேர்தல் முறை, முந்தைய பஞ்சாயத்து அமைப்புகளின் சாதனைகள் , கிராம சபை ஆகியவற்றை அறிந்து கொண்டோம். இம்மடல் பெண்களின் வன்கொடுமைகளுக்கு எதிரான சிறப்பு மலராக வெளியிடுவதில் மகிழ்வடைகின்றேன்.

"மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா" என்று ஓர் கவிஞன் பெண்களை போற்றி பாடியுள்ளான். மேலும்

" ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாய் வாழ வேண்டும்"என்று ஆன்றோர்களால் கூறப்பட்டு வந்தாலும் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற வன்கொடுமைகள் கிராமந்தொடங்கி நகர் வரைக்கும் நடந்து கொண்டுதான் உள்ளது.

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் " என்ற பாரதியின் சொற்களுக்கு வடிவமாய், புதுமைப்பெண்களாய் முன்னேற்றப்பாதையில் கை கோர்த்து நடந்து

" இணைந்த நாங்கள் இமயம் அடைவோம்" என்ற இலக்கை அடைய வாழ்த்துகிறேன். பெண் சமுதாயமாக இணைந்த நாம் பெண்களுக்கான விழிப்புணர்வு, கடன் வசதி, பொருளாதார முன்னேற்றம், கிராம மேம்பாடு போன்றவற்றில் ஈடுபட்டு பலமடைந்துள்ளோம்.

பெண்கொடுமைகளுக்கு குரல்கொடுக்க வன்முறையை வேரறுக்க பூகம்பமாய் புறபட்டு விட்டோம் மாவட்ட கூட்டமைப்பாய். இனி பெண்களுக்கு "விடிவது புது உலகம் தான் ". தொடரட்டும் உங்களின் சாதனைகள் இமயம் மட்டும்.

நட்புறவுடன்

த.பொற்கொடி

ஆசிரியர்